**OS.NO. 43/2008 DW-1**

நாள் : 13.08.2025

பெயர் : வெங்கட்ரமணன்

த/பெ : பத்மநாபன்

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எனக்காவும் அரசாங்கம் சாராத மற்ற பிரதிவாதிகளுக்காகவும் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் இவ்வழக்கு சொத்து என் தாத்தா 05.01.1962 அன்று பி.வா.சா.ஆ.1 கிரய பத்திரம் மூலம் கிரயம் பெற்று என் தகப்பனார் அனுபவித்து வந்து பின்பு நாங்கள் அனுபவித்து வருகிறோம் என்ற முறையில் தான் எதிர்வாதம் செய்கிறேன் என்றால் சரிதான். மேற்கூறிய கிரய பத்திரத்தில் வீதிக்கு வடக்கு, வி.பி திருவேங்கிடம் முதலியார் வகையரா வீட்டிற்கு மேற்கு, என் வீட்டிற்கு கிழக்கு, வடவாண்டை வீதிக்கு தெற்கு இதன் மத்தியில் கிழக்கு – மேற்கு 45 அடி, வடக்கு – தெற்கு 90 அடி என்று குறிப்பிட்டுள்ளது இதில் என் வீட்டிற்கு கிழக்கு என்பது யாரை குறிக்கிறது என்றால் குழந்தைவேல் முதலியார் வீட்டை குறிக்கிறது.

மேற்படி அளவுள்ள சொத்தை தான் குழந்தைவேல் முதலியாரிடமிருந்து எனது தாத்தா அண்ணாசாமி முதலியார் கிரயம் பெற்றார் என்றால் சரிதான். மேற்கூறிய அளவை தவிர்த்து வேறு எந்த அளவும் கிரய பத்திரத்தில் இல்லை என்றால் சரிதான். 05.01.1962 கிரய பத்திர முன்னிலைக்கு கிழக்கு – மேற்கு 49 அடி கிரயம் பெற்றதாக எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்கூறிய பத்திரத்தில் உள்ள அளவை தவிர்த்து அதன் அருகில் உள்ள எந்த இடத்தையும் நாங்கள் கிரயம் பெறவில்லை என்றால் சரிதான். வ.சா.ஆ.1 கிரய பத்திரத்தில் தென்னான்டை தெருவில் வீதிக்கு வடக்கு, ஆண்டாள் அம்மாள் வீட்டிற்கும் காலி மனைக்கும் கிழக்கு, கு.

அண்ணாசாமி முதலியார் வீட்டிற்கு மேற்கு, களத்து மேட்டிற்கு தெற்கு இதன் மத்தியில் கிழக்கு – மேற்கு 10 ¼ கஜம், வடக்கு – தெற்கு 16 கஜம், இதற்கு பின்புறம் உள்ள காலி மனை கிழக்கு – மேற்கு 10 ¼ கஜம், வடக்கு – தெற்கு 14 கஜம் மேற்படி வீட்டின் மேலாண்டை புறம் நாரா சந்து கிழக்கு – மேற்கு 1 கஜம், வடக்கு – தெற்கு 30 கஜம் அளவுள்ள சொத்தை என் தாத்தாவோ அல்லது என் அப்பாவோ கிரயம் வாங்கவில்லை என்றால் சரிதான். ஆனால் எனது தந்தையார் திருமணம் ஆனதிலிருந்து அந்த வீட்டில் தான் இருந்து வந்தார் நாங்களும் இப்போது வரை உள்ளோம்.

நீதிமன்ற ஆணையர் மூலம் தாவா இடத்தை சர்வேயர் மூலம் ஆய்வு செய்தால் நான் அண்ணாசாமி கிரயம் பெற்ற இடத்தில் சுவாதீனத்தில் உள்ளேனா அல்லது வாதிகள் தகப்பனார் கிரயம் பெற்ற சொத்தில் சுவாதீனத்தில் உள்ளேனா என்று தெரியவரும் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் மூலம் ஆய்வு செய்ய எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான்.

**வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

SADASIVAM POORNIMA

District Munsif cum Judicial Magistrate, Ranipet
Digitally signed by SADASIVAM POORNIMA
Date: 2025.08.14 11:19:49 +0530

District Munsif cum Judicial Magistrate,
Ranipet.